# இளைஞர் தொழிற்திறன் பயிற்சி - 2011-12

அழகுகலை பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் - திட்ட செயலாக்க அலகு, சென்னை - மாவட்டம்

இடம் : மைதிலி அழகுகலை நிலையம், சென்னை -600 017.
நாள் : 22.11.2012 நேரம் : மாலை 6.30 மணி.

சென்னை மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டில் 1510 வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அரசு ஆணைக்கிணங்க மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி ஆகியோரின் வழிகாட்டுதலில் படி பல்வேறு தொழிற்பயிற்சி நிறுவனங்களை தேர்வு செய்து அந்நிறுவனங்களின் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி 2011-12 ஆம் ஆண்டு 15 தொழில் பயிற்சி நிறுவனங்கள் மூலம் ஆயத்த ஆடை, செயற்கை நகைகள், ஓட்டுநர் பயிற்சி, மற்றும் கணினி பயிற்சி போன்ற 16 வகையான தொழில்களுக்கான பயிற்சி 1510 இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிகள் அளிக்கப்பட்டதற்காக இதுவரை ரூ.62.35 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களான இந்தியா ஸ்கில்ஸ் மற்றும் இட்காட் நிறுவனங்கள் மூலம் தேசிய அளவிலான தொழில் சார்ந்த கல்விக்குழுவின் தேர்வு நடத்தி (NCVT) சான்றிதழ் பெற்று வழங்கப்படுகிறது. இதுவரை 560 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

இதன் ஓர் அங்கமாக சென்னை தியாகராய நகரில் உள்ள மைதிலிஸ் அழகு கலை பயிற்சி நிறுவனத்தில் 2011-12 ஆம் ஆண்டில் 110 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு NCVT தேர்வு நடத்தி தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர்(கல்வி) திரு.தி.ந.வெங்கடேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைப்பெற்ற விழாவில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்கள். மேலும் இவ்விழாவில் சென்னை மாவட்ட திட்ட அலுவலர் திருமதி.சு.சினேகலதா மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.